(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 335.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 சனவரி 22, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1971/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்திலுள்ள தெனியாய கல்வி வலயத்தின் பஸ்கொட கோட்டக் கல்விக் அலுவலகம் இயங்குகின்ற கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) இக்கட்டிடம் மாற/ஊறுபொக்க தேசிய பாடசாலை வளவிலேயே அமைந்துள்ளதனால் இவ்வித்தியாலயத்தின் மாணவ/மாணவிகள் மட்டுமின்றி அங்கு பணியாற்றுபவர்களினதும் உயிருக்கு கடும் அச்சுறுத்தலாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், இக்கட்டிடத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3115/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து மன்னார் மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து மன்னார் மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியன காணி வாரியாக யாவையென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பல தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் மன்னார் மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3366/ '12

3.

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினால் மதிய உணவு வழங்கப்படுகின்றதா;

(ii) அவ்வாறாயின், மதிய உணவு வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3728/ '13

4.

கௌரவ அனுர திசாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சில வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட ரன்மினிதென்ன ரெலி சினிமா கிராமமானது, 2013 மார்ச் 05ஆம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) முதலாவதாகத் திறந்து வைக்கப்பட்ட தினம் முதல் 2013 மார்ச் வரை இங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுகள் யாவை;

(iii) ரெலி சினிமாக் கிராமம் என்ற வகையில் மேற்படி கருத்திட்டத்துக்காக ஏற்கனவே செலவழிக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை யாது;

(iv) மேற்படி கிராமத்தை திறந்து வைக்கின்ற இரண்டு நிகழ்வுகளுக்குமாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் வெவ்வேறாக யாது;

(v) கலைத் துறையின் மேம்பாட்டுக்காக மேற்படி இடத்தை பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3732/ '13

5.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் மேலதிக பொதுமுகாமையாளர் பதவியை வகிப்பவரின் பெயர் யாது;

(ii) மேற்படி பதவியை வகிப்பவரினால் பெற்றுக் கொள்ளப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையில் பொது முகாமையாளர் பதவியை வகிப்பவரின் பெயர் யாது;

(ii) மேற்படி பதவியை வகிப்பவரினால் பெறப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவு;

(iii) மேற்படி பதவியை வகிப்பவருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சருக்கும் இடையே உறவு முறை காணப்படுகின்றதா;

(iv) ஆமெனின், அந்த உறவு முறை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரே நபரால் மேலே குறிப்டப்பட்ட இரண்டு நிறுவனங்களிலும் பதவி வகிக்க முடியுமா;

(ii) இதன்படி இரண்டு நிறுவனங்களிலும் பதவி வகித்தல் தவறாக இருப்பின், அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4410/ '13

6.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் 'தயட்ட கிருல' வேலைத்திட்டத்தின் கீழ் குருணாகல் மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படுகின்ற வீதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒவ்வொரு வீதியினதும் அபிவிருத்திக்கு ஏற்புடையதான கேள்விப்பத்திரங்கள் அளிக்கப்பட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) ஒவ்வொரு வீதி அபிவிருத்தி கருத்திட்டத்துக்கும் அளிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களுக்கு ஏற்புடையதாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2452/ '12

7

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மொனறாகலை மாவட்டத்தில், மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றும் கெப் வண்டியொன்றும் பிரதேச சபை வளாகத்தில் பல ஆண்டுகளாக சிதைவுற்று வருவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச சபையில், மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் அழிவடைய விடப்பட்டுள்ளமை வளங்களின் விரயமாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த வாகனங்களைத் திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்காமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மடுல்ல பிரதேச சபை மேற்படி இரண்டு வாகனங்களையும் பயன்பாட்டிற்கு எடுக்காவிடின் அவற்றை ஏலத்தில் விட்டு வருமானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன் என்பதையும்;

(ii) இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள தடையேதுமிருப்பின் அவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3116/ '12

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியன காணி வாரியாக யாவையென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா

என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3295/ '12

9.

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊடகவியலாளர்களுக்கு இலவசமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்ட போது வெளிப்படைத்தன்மை பின்பற்றப்படவில்லை என்பதையும்;

(ii) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர்களுக்கும் கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன என ஊடகவியலாளர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மடிக்கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊடகவியலாளரினதும் சேவைக் காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர்களுக்கும் மேற்படி கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பின், அத்தகைய ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களது பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கணினிகளை பெற்றுக்கொடுப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிரந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்கு கணினிகளை பெற்றுக்கொடுப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3117/ '12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து வவுனியா மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து வவுனியா மாவட்டத்தில் மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியன காணி வாரியாக யாவையென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம், 2 ஆம் மற்றும் 3 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"எம்.எஸ். தௌபீக் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"உயர் நீதிமன்ற நீதியரசர்களை நீக்குவதற்கான தீர்மானங்களை எடுக்கும் சந்தர்ப்பங்களில், நியாயமான, சுதந்திரமான, நடுநிலையான வழக்கு விசாரணையை உறுதிசெய்வதற்காகவும்; அத்துடன் அது சம்பந்தப்பட்ட விடயங்களுக்காகவும் அல்லது அத்துடன் தொடர்புபட்ட துணை நிகழ்வுகளுக்குமானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ ஜானக பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஸ்ரீ லங்கா அமத்யப மகா சபாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 3 ஆம் மற்றும் 191 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 213 (ஈ) மற்றும் 213 (உ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 ஏப்பிறல் 11 ஆம் திகதிய 1805/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தனப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 சனவரி 02 ஆந் திகதிய 1843/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2014 சனவரி 08 ஆந் திகதிய 1844/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

15.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

16.

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

17.

ஹேண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

18.

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

19.

பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.